**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.596/2022 P.W.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | நடராஜன் | க–பெ | வெள்ளைச்சாமி |
| ஊர்: | : | கோட்டையூர் | சமயம்: | |
| வயது: | : | 55/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | பெயிண்டர் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.07.2025**

**1ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிரி ஆஜர்.**

------------------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் கோட்டையூரில் வசித்து பெயிண்டர் வேலை செய்து வருகிறேன். கடந்த 08.07.2015 அன்று நான் பணியை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்து கொண்டிருந்தேன். இரவு 8.00 மணிக்கு புளுஸ் கால்பந்து மைதானம் எதிரில் வந்து கொண்டிருந்தபோது பள்ளத்தூர் போலீசார் சம்பவ இடத்தில் விசாரணை செய்து வரைபடம் தயார் செய்தார்கள். அங்கு அவர்கள் தயார் செய்த பார்வை மகஜர் ஆவணத்தில் இரண்டாவது சாட்சி கையொப்பம் செய்தேன். **பார்வை மகஜர் அசாஆ 2.** போலீசார் வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்தில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் தெரியாது. மொத்தம் எத்தனை கையெழுத்து போட்டேன் என்ற விபரம் தெரியாது. ஆவணத்தில் எந்த விபரங்கள் உள்ளன என்றும் என்ன எழுதி இருந்தது என்றும் தெரியாது. கையெழுத்தை காவல் நிலையத்தில்வைத்து செய்தேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.07.21 06:53:59 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.596/2022 P.W.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | கணேசன் | க–பெ | அழகப்பன் |
| ஊர்: | : | கோட்டையூர் | சமயம்: | |
| வயது: | : | 53/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | தனியார் தொழில் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.07.2025**

**1ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிரி ஆஜர்.**

-------------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் கோட்டையூரில் வசித்து தனியார் தொழில் செய்து வருகிறேன். கடந்த 08.07.2015 அன்று நான் பணியை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்து கொண்டிருந்தேன். மாலை 4.30 மணிக்கு வேலங்குடி பெட்ரோல் பல்க் தாண்டி கால்பந்து மைதானம் அருகே வந்து கொண்டிருந்தபோது சம்பவ சாலையில் முன்னால் ஒரு பெண்மணி இருசக்கர வாகனத்தில் இருந்து இறங்கி சற்று பதட்டமாக அங்கு இருந்தார். அங்கு சென்று அவரிடம் கேட்ட போது எங்களை ஓவர் டேக் செய்து இருசக்கர வாகனத்தில் இரண்டு நபர்கள் சென்று கொண்டிருந்தார்கள். எனது கழுத்தில் அணிந்திருந்த 7 பவுன் தங்க நகையினை பறித்துச்சென்று விட்டார்கள் என்று சொன்னார். நான் உடனடியாக என்னுடைய இருசக்கர வாகனத்தில் விரட்டி சென்றபோது பேருந்து ஒன்று வந்து விட்டது. அதனை ஓவர் டெக் செய்து எதிரிகள் சம்பவ இடத்தில் இருந்து தப்பி சென்றுவிட்டார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

புகார்தாரரின் வாகன எண் எனக்கு தெரியாது. எதிரிகள் ஓவர் டெக் செய்த பேருந்தின் எண் எதுவும் தெரியாது. இரண்டு நபர்கள் சென்ற வண்டியின் எண் தெரியுமா என்றால் தெரியாது. புகார்தாரர் முன்னாடியே செயின் அணிந்திருந்தார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது. புகார்தாரர் சொன்னதன் அடிப்படையில் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நடுவர், காரைக்குடி

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.596/2022 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ராணி | க–பெ | அந்தோணிராஜ் |
| ஊர்: | : | ஸ்ரீராம் நகர் | சமயம்: | |
| வயது: | : | 53/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | ஆசிரியை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.07.2025**

**1ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிரி ஆஜர்.**

---

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் ஸ்ரீராம் நகரில் வசித்து செட்டிநாடு அரசு பள்ளியில் ஆசிரியையாக பணிசெய்துவருகிறேன். கடந்த 08.07.2015 அன்று நான் பள்ளிக்கு சென்று விட்டு வீட்டிற்கு சென்று கொண்டிருந்தேன். மாலை 4.40 மணிக்கு செட்டிநாடில் இருந்து கோட்டையூர் வழியாக இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது சம்பவ சமயத்தில் சம்பவ சாலையில் பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் எனது கழுத்தில் அணிந்திருந்த 8 பவுன் தங்க செயினை அறுத்துக்கொண்டு சென்று விட்டார்கள். பின்னர் பள்ளத்தூர் காவல் நிலையம் சென்று நடந்த விவரங்களை சொல்லி புகார் அளித்தேன். **புகார் அசாஆ 1.** வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். மேற்படி செயினின் மதிப்பு 70000 ரூபாய் இருக்கும். பின்னர் சில மாதங்களுக்கு பின்பு பள்ளத்தூர் போலீசார் விசாரணைக்காக வரச்சொல்லி செயினை திருடிய நபர்களை அடையாளம் பார்க்க சொன்னார்கள். மேற்படி செயினை பறித்துச்சென்ற நபர்களில் ஒருவர் ஆஜர் எதிரி. பின்னர் வழக்கின் சொத்தை நீதிமன்றத்தில் மனு செய்து நிபந்தனை உடன் நான் பெற்றுக்கொண்டேன்.

**குறுக்கு விசாரணை**

புகாரை எழுதியது யார் என்றால் காவல் நிலையத்தில்தான் எழுதினார்கள். புகாரில் செயினை அறுத்த நபர்களின் அடையாளங்களை குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னை செயிலுக்கு அழைத்து அடையாள அணிவகுப்பு நடத்தி எதிரிகளை அடையாளம் காண போலீசார் என்னை அழைத்தார்களா என்றால் இல்லை. எனக்கு எதிரியை எப்படி தெரியும் என்றால் சம்பவ இடத்தில் பார்தேன் மேலும் காவல் நிலையத்திலும் பார்த்தேன். இரண்டு நாட்கள் பார்த்தபோது என்ன உடை அணிந்திருந்தார் என்றால் நியாபகம் இல்லை. தற்போது சாட்சி எதிரி வெள்ளை சட்டை அணிந்திருந்ததாக கூறுகிறார். சம்பவம் நடைபெறும் போது வெள்ளை சட்டையுடன்

இருந்தார். என்னுடைய புகாரில் காணாமல் போன செயின் 7 பவுன் என்று நான் சொல்லிருந்தால் அது தவறு தொலைந்தது 8 பவுன் ஆகும். புகாரில் அது எந்த வகையான செயின் என்று நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். செயினை நீதிமன்றத்தில் திருப்பி வாங்கும் போது 7 பவுன் தான் வாங்கினேன். மேற்படி செயின் எனது கைவசம் உள்ளதா என்றால் வீட்டில் உள்ளது தற்போது திருப்பி தொலைந்து விட்டது. போலீசார் சொல்லிக்கொடுத்துதான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நடுவர், காரைக்குடி